JESUS REDEEMS MINISTRIES

சிறுவர் ஜெப மலர்

மரம்: 19 கனி: 7 ஜூலை 2021 ஆண்டு சந்தா: ₹ 25/- தனி பிரதி: ₹ 5/-

‘யெகோவா ரொஃபேகா’

(நம்மை குணப்படுத்தும் கர்த்தர் இயேசு) யாத். 15:26.

ஆசிரியர் J. செல்வக்குமார்

உங்கள் அங்கிளிடமிருந்து...

இயேசு கிறிஸ்துவில் மிகவும் பிரியமுள்ள என் அன்புப் பிள்ளைகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள்! சுகமாயிருக்கிறீர்களா?

இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, ஜீவனைத் தந்த இயேசுவுக்கு கோடான கோடி நன்றிகள். கடந்த (2021) மே மாதம் நடைபெற்ற Virtual Bible School (VBS)ஐ கர்த்தர் மிகவும் ஆசீர்வதித்தார் அல்லவா. நீங்கள் எல்லோரும் அதில் மகிழ்ச்சியோடு பங்கு பெற்றீர்கள். நீங்கள் அனுப்பின craftwork என்னை ஆச்சரியப்பட வைத்தது.

இது எழுப்புதலின் காலம். அப்படி என்றால் என்ன? சிறியவர்கள், பெரியவர்கள் என்று எல்லோரும் கர்த்தர் பக்கமாய் திரும்பி, கர்த்தரைத் தொழுது, அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து வாழும் ஒரு பொற்காலம். உங்களைப் போன்ற சிறுபிள்ளைகள் நன்றாக ஜெபித்து, பாட்டுபாடி, கர்த்தரை ஆராதிப்பதை நீங்கள் பார்த்து வருகிறீர்கள். இந்த சிறுவர் ஜெபமலர் வெளியிடுவதின் நோக்கமே, சிறுபிள்ளைகள் ஜெப வீரர்களாய் உருவாக வேண்டும் என்பதே.

உங்களுக்கு ஒரு சந்தோஷமான விஷயம் இனி ஒவ்வொரு மாதமும், கடைசி ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30முதல், 2:30வரை, இந்த சிறுவர் நிகழ்ச்சியை நம்முடைய சத்தியம் Tv, You tube, Face book, Comforter TVயில் நேரடியாக ஒளிப்பரப்பப்படும். நீங்கள் இதில் பங்குப் பெற்று, ஆசீர்வதிக்கப்படுங்கள்.

இயேசுவின் கண்மணிகளே! உங்களுக்காக ஜெபிக்கிறேன்.
கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் அங்கிள்,
Mohan C L.

வாழ்த்துகிறோம்... ஜெபிக்கிறோம்!

நம்முடைய ‘இயேசு விடுவிக்கிறார்’ சிறுவர் ஊழியத்தில் சுமார் 12 ஆண்டுகள் பொறுப்பாக செய்து கொண்டிருந்த சகோ. **A A J** கென்னடி அவர்கள் குடும்பமாக தங்களுடைய சொந்த காரணங்களுக்காக ‘இயேசு விடுவிக்கிறார்’ ஊழியத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள்.

இத்தனை ஆண்டுகள் நம்முடைய ஊழியத்தில் இணைந்து சிறப்பாக ஊழியம் செய்த அவர்களை ‘இயேசு விடுவிக்கிறார்’ ஊழியத்தின் மூலம் மனதார வாழ்த்துகிறோம். தொடர்ந்து அவர்கள் குடும்பத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மேலும் தொடர்புக்கு: **இயேசு விடுவிக்கிறார், சிறுவர் ஜெப மலர்,**
நாலுமாவடி-628211. தூத்துக்குடி மாவட்டம். **Cell: 94883 75315.**
Kids Website: kids.jesusredeems.com Email: kids@jesusredeems.org
For 24 Hours Prayer Support: Ph: 04639 - 22 00 22

ஹலோ நான் யெகூ வந்திருக்கிறேன்...

ஹலோ நண்பர்களே! நான் யெகூ பேசுகிறேன்...

ஹலோ நண்பர்களே, நல்லா சுகமாயிருக்கிறீர்களா? இந்த கொரோனா வைரஸ் கிருமி, நம் நாட்டை ஒரு வழி பண்ணிவிட்டது. இப்பத்தான் எல்லாரும் தடுப்பு ஊசி போட்டு கொண்டு வருகிறாங்க. ஒரு வருடமாக பள்ளிக் கூடம் திறக்கவில்லை. சரி நான் மேட்டருக்கு வருகிறேன். இன்றைக்கு நாம எல்லோரும் மோசே மாமாவை சந்திக்கப் போகிறோம்.

நான் உங்களை 2,500 வருடங்களுக்கு முன்பாக கூட்டிட்டுப் போறேன். நீங்களும் வாங்க போகலாம்.

இவங்க தான் இஸ்ரவேலர்கள். இவர்களைத் தான் கர்த்தர் அற்புதமாய் எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கி, ஆசீர்வாதமான கானான் தேசத்திற்கு கர்த்தர் வழி நடத்தி வந்தார். அவங்க போன பாதைகள், மலைகளும், வனாந்தரமுமான காட்டுப் பகுதி.

சரி, நாம அங்கே நிற்கும் மோசே மாமாவிடம் போய் அவங்களுடைய அனுபவம் கேட்கலாம்.

யெகூ: மோசே மாமா மோசே மாமா உங்கள பார்க்கத் தான் வந்தேன்.

மோசே: ரொம்ப சந்தோஷம் யெகூ! நீ எப்படி இருக்கிறாய்?

யெகூ: நாங்க எல்லாரும் வீட்டிற்குள்ளேயே இருக்கிறோம். ஆலயத்திற்கு போக முடியல, விளையாட போகவில்லை, VBS கூட நாங்க வீட்டில இருந்தே தான் பங்கு பெற்றோம்.

மோசே: ஏன் என்னாச்சு?

யெகூ: எல்லாம் இந்த கொரோனா வைரஸ் கிருமியினால் நிறைய மக்கள் செத்துப் போயிட்டாங்க. அலை அலையாய் இந்த கொரோனா வைரஸ் வருது மோசே மாமா.

மோசே: ஓ அப்படியா, பயப்படாதீங்க நம்ம கர்த்தர் நம்மை குணமாக்குகிறவர்.

யெகூ: மோசே மாமா, உங்க காலத்தில் இப்படி நடந்திருக்கா?

மோசே: ஆமாம், சரி வா நாம அந்தக் கல் மேலே உட்கார்ந்து பேசலாம்.

யெகூ: சரி மோசே மாமா.

மோசே: கர்த்தர் மிகவும் நல்லவர். ஒரு பெரிய கூட்டம் மக்களை இந்த வனாந்திரமான பாதையில் அற்புதமாய் நடத்தி வந்தார்.

யெகூ: இந்தக் காட்டுப் பகுதியில் எப்படி மோசே மாமா சாப்பாடு, தண்ணீர் எல்லாம் கிடைக்கும்?

மோசே: கிட்டத்தட்ட 20 லட்சம் பேர்களுக்கு தண்ணீர், உணவு என்றால் நம்மால இந்த வனாந்திரத்தில் செய்து கொடுக்க முடியாது. ஆனா கர்த்தர் என்ன செய்தாங்க தெரியுமா? இரவில் அக்கினி ஸ்தம்பமான வெளிச்சம் கொடுத்தாங்க, பகல்ல வெயில் அதிகமாக இருக்காதபடி மேகஸ்தம்பம் அவங்க கூடவே இருந்தது.

யெகூ: ஆச்சரியமா இருக்கே!

மோசே: அதுமட்டுமல்ல, நாங்க எல்லாரும் சாப்பிடுவதற்காக, வானத்திலிருந்து தினமும் மன்னா என்ற சுவையான சத்தான உணவு கொடுத்தாங்க.

யெகூ: ஓ சூப்பர்!

மோசே: அதுமட்டுமல்ல, செல்லும் இடங்களில் தண்ணீரும் கிடைக்கப் பண்ணினாங்க.

யெகூ: கர்த்தருடைய பிள்ளைகளை கண்மணிபோல சுமந்து வந்திருக்கிறார் நம்ம தேவனாகிய கர்த்தர்.

மோசே: ஆனால், மக்களில் சிலபேர் ரொம்ப முணுமுணுத்தாங்க, கொஞ்சம் கஷ்டம் வந்தாலும், கர்த்தருக்கும் எனக்கும் விரோதமாகப் பேசுவாங்க.

யெகூ: ஓ அப்படியா!

மோசே: ஒருமுறை இப்படித்தான் ரொம்பவும் கோபப்பட்டு எங்களுக்கு சாப்பாடு மன்னா மட்டும் சாப்பிட்டு சலித்துவிட்டது. தண்ணீர் சரியாக கிடைக்கல, எங்களை சாகடிக்கவா மோசே இங்கு கூட்டிட்டு வந்தீங்கன்னு கேட்டு, சத்தம் போட்டாங்க.

யெகூ: ஐய்யய்யோ இது தப்பு தானே.

மோசே: ஆமாம் யெகூ, அதனால நாங்க தங்கியிருக்கிற இடத்தில் நிறைய கொள்ளிவாய் பாம்புகள் வந்தது, நிறைய பேரை கொத்தியது, நிறைய பேர் செத்துப் போனாங்க.

யெகூ: ஓ, அப்படியா மாமா, கொள்ளிவாய் பாம்புன்னா என்ன?

மோசே: அந்தப் பாம்பு கடித்த இடத்தில வலி தாங்க முடியாது, எரிச்சல் உண்டாகும். பிறகு அவங்க விஷம் ஏறி செத்துவிடுவாங்க.

யெகூ: இது தேவையா? ஒழுங்கா நன்றியோடு இருந்திருங்கலாம்லா. பிறகு என்ன நடந்திச்சி?

மோசே: பின்னர் மக்கள் தங்கள் தப்பிதங்களை உணர்ந்து, கர்த்தரிடம் ஜெபம் செய்தாங்க. என்னிடமும் வந்து அழுதாங்க. நான் கர்த்தரிடம் அழுது ஜெபித்தேன். கர்த்தர் என்னிடம் ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னாங்க. இந்த மக்கள் உண்மையாகவே கீழ்ப்படிகிறாங்களான்னு பார்க்க.

யெகூ: என்ன சொன்னாங்க மோசே மாமா?

மோசே: வெண்கலத்தால் செய்யப்பட்ட ஒரு பாம்பை உருவாக்கி, உயர்ந்த மரக் கம்பை நாட்டி அதுல அதை எல்லாரும் பார்க்கும் தூரத்தில் வைக்கச் சொன்னாங்க.

யெகூ: அதாவது, நம்ம சிறுவர் பூங்கா, பீச் போன்ற இடங்களில் வைக்கிற உயரமான மின் விளக்கு போலவா?

மோசே: ஆமாம். யாராவது இந்த விஷப் பாம்பினால் கடி பட்டால், உடனே அந்த மரக் கம்பை நோக்கிப் பார்த்தால், உடனே விஷம் அவர்களை ஒன்றுமே செய்யாது. இல்ல நாங்கள் எல்லாம் அதற்கு கீழ்ப்படியமாட்டோம் என்று சொல்லி, அதைப் பார்க்காமல் இருக்கிறவர்கள் செத்துப் போனாங்க.

யெகூ: ஓ அப்படியா!

மோசே: இதனால நிறைய மக்கள் பாதுகாக்கப்பட்டார்கள். கர்த்தர் எங்களை குணமாக்கி, பாதுகாத்தார். அதனால கர்த்தரை ‘யெகோவா ரொஃபேகா’ என்று நாங்க அழைத்தோம்.

யெகூ: சூப்பர் ஐடியா மோசே மாமா.

மோசே: என்ன சொல்றா?

யெகூ: நானும் போய் கொரோனா பந்து போல செய்து வாட்சப்ல status வைக்கப் போகிறேன். அதைப் பார்க்கிறவங்க பிழைச்சுருவாங்க.

மோசே: அப்படி இல்லை யெகூ, உங்க காலத்தில இருக்கிறவங்களுக்கு எல்லாம் பெரிய ஆசீர்வாதங்களை கர்த்தர் கொடுத்திருக்காங்க.

யெகூ: என்ன சொல்றீங்க?

மோசே: ஆமாம் மனிதர்களுடைய பாவங்கள், சாபங்கள், நோய்களை எல்லாம் இயேசு கிறிஸ்து சிலுவையிலே சுமந்து தீர்த்துவிட்டாங்க. இன்றைக்கு யார் யாரெல்லாம் சிலுவையில் தொங்கும் இயேசுவை நோக்கிப் பார்த்து ஜெபம் செய்கிறாங்களோ, அவங்க எல்லாம் பிழைச்சிருவாங்க.

யெகூ: சரியா சொன்னீங்க மோசே மாமா.

மோசே: இனி உங்க காலத்தில கொள்ளை நோயோ, பஞ்சங்களோ, போர் மேகம் சூழ்ந்தாலோ, நீங்க நோக்கி பார்க்க வேண்டியது யாரை?

யெகூ: இயேசு கிறிஸ்துவை.

மோசே: சரியாகச் சொன்னாய்

யெகூ: நான் வந்தக் காரியம் முடிந்தது. நான் கிளம்பட்டுமா.

மோசே: Bye யெகூ Bye Bye stay safe!

யெகூ: நண்பர்களே

இன்றைக்கு மோசே மாமாவை சந்தித்ததில்,
நாம் பெற்றுக் கொண்ட செய்தி என்ன தெரியுமா?

1. நாம் நம்முடைய தவறுகளை ஒத்துக் கொண்டு, இயேசுவிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.
2. இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும்.
3. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவையே நோக்கிப் பார்க்க வேண்டும்.அப்பொழுது நாம் பிழைப்போம்.

கர்த்தர் உங்களை குணமாக்குவார். நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும் இருங்க. இயேசுவே நம் பரிகாரி. அவரை நோக்கிப் பார்ப்போம். ஜெபத்தில் உறுதியாயிருப்போம்.

ஜுலை 1

வேதப் பகுதி:
நீதிமொழிகள் 6ம்
அதிகாரம் 1 – 22.

மனப்பாட வசனம்:
“சோம்பேறியே நீ
எறும்பினிடத்தில் போய்,
அதின் வழிகளைப் பார்த்து,
ஞானத்தைக் கற்றுக் கொள்.”
நீதிமொழிகள் 6:6.

இன்றைய கேள்வி:
? கர்த்தர் வெறுக்கும்
6 காரியங்கள்
எவைகள் என்று,
நீதிமொழிகள் சொல்கிறது?

ஜெபக் குறிப்பு:
கொரோனா கொள்ளை
நோய்க்கு மருத்துவமனையில்
பணி செய்யும்
மருத்துவர்களுக்காக,
அவர்களது பாதுகாப்புக்காக
ஜெபிப்போம்.

ஜுலை 2

வேதப் பகுதி:
நீதிமொழிகள் 8ம்
அதிகாரம் 1 – 22.

மனப்பாட வசனம்:
“தீமையை வெறுப்பதே
கர்த்தருக்குப் பயப்படும்
பயம்;” நீதிமொழிகள் 8:13.

இன்றைய கேள்வி:
? முத்துக்களைப்
பார்க்கிலும் எது நல்லது?

ஜெபக் குறிப்பு:
சீனா தேசத்திலுள்ள
மக்கள் அனைவரும்,
இயேசுவை இரட்சகராக
அறிந்து ஏற்றுக்
கொள்ள **ஜெபிப்போம்.**

ஜுலை 3

வேதப் பகுதி: நீதிமொழிகள் 9ம் அதிகாரம் 1 – 12.

மனப்பாட வசனம்: “கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.” நீதிமொழிகள் 9:10.

? **இன்றைய கேள்வி:** எது சகலப் பாவங்களையும் மூடும்?

ஜெபக் குறிப்பு: அநேக மக்களை கொள்ளை நோய்கள் மூலம் வேதனைப்படுத்துகிற வலுசர்ப்பத்தின் செயல்கள் அழிந்து போகும்படி **ஜெபிப்போம்.**

ஜூலை 4

வேதப் பகுதி: நீதிமொழிகள் 10ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசுநாட்களைப் பெருகப்பண்ணும்;" நீதிமொழிகள் 10:27.

இன்றைய கேள்வி: எது ஐசுவரியத்தைத் தரும்?

ஜெபக் குறிப்பு: சீனா தேசம் இப்படி மனிதர்களை அழிக்கக்கூடிய கொடிய வைரஸ் கிருமிகளை ராணுவ ஆராய்ச்சி கூடங்களில் உற்பத்தி செய்கிறதாம். கர்த்தர் அதைத் தடைப்பண்ணி போடவும், அவைகள் அழிந்து போகவும் **ஜெபிப்போம்.**

ஜூலை 5

வேதப் பகுதி:
நீதிமொழிகள்
11ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
"ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்." நீதிமொழிகள் 11:14.

இன்றைய கேள்வி:
எது கர்த்தருக்கு அருவருப்பானது?

ஜெபக் குறிப்பு:
கொரோனா 3வது அலை நம் தேசத்தில் வரவே கூடாது. கர்த்தர் அதை அழித்துப் போட **ஜெபிப்போம்.**

ஜூலை 6

வேதப் பகுதி:
நீதிமொழிகள்
12ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
"அவனவன் தன் தன் வாயின் பலனால் திருப்தியடைவான்; அவனவன் கைக்கிரியையின் பலனுக்குத்தக்கதாக அவனவனுக்குக் கிடைக்கும்." நீதிமொழிகள் 12:14

இன்றைய கேள்வி:
எந்தப் பாதையில் ஜீவன் உண்டு, மரணம் இல்லை?

ஜெபக் குறிப்பு:
கொரோனா வியாதியினால், சொந்தங்களை இழந்த சிறுபிள்ளைகளுக்கு கர்த்தர் ஆறுதலையும், வழி காட்டுதலையும் கொடுக்க **ஜெபிப்போம்.**

ஜுலை 7

வேதப் பகுதி:
நீதிமொழிகள்
13ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
“மனுஷன் தன் வாயின் பலனால் நன்மையைப் புசிப்பான்;” நீதிமொழிகள் 13:2.

இன்றைய கேள்வி:
? யார் தன் மகனை பகைக்கிறான் என்று சொல்லப்பட்டுள்ளது?

ஜெபக் குறிப்பு:
அரசாங்கம் எடுக்கின்ற நல்ல திட்டங்கள், எல்லா மக்களுக்கும் போய்ச் சேர **ஜெபிப்போம்.**

ஜுலை 8

வேதப் பகுதி:
நீதிமொழிகள் 14ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
“நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான்;” நீதிமொழிகள் 14:29.

இன்றைய கேள்வி:
? எது ஜீவ ஊற்று என்று எழுதப்பட்டுள்ளது?



ஜெபக் குறிப்பு:
எழுப்புதல் தேசமெங்கும் உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 9

வேதப் பகுதி: நீதிமொழிகள் 15ம் அதிகாரம் 1 – 22.

மனப்பாட வசனம்: “நீதிமானுடைய வீட்டில் அதிக பொக்கிஷமுண்டு; துன்மார்க்கனுடைய வருமானத்திலோ துன்பமுண்டு.” நீதிமொழிகள் 15:6.

? **இன்றைய கேள்வி:** யாருடைய மனம் அறிவைத் தேடும்?

ஜெபக் குறிப்பு: மூடப்பட்டிருக்கும் ஆலயங்கள் திறக்கப்பட்டு, ஜெபங்களும், ஆராதனைகளும் தடையில்லாமல் நடைபெற **ஜெபிப்போம்.**

ஜூலை 10

வேதப் பகுதி:
நீதிமொழிகள் 16ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
“உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.” நீதிமொழிகள் 16:3.

இன்றைய கேள்வி:
தன் ஆத்துமாவைக் காக்கிறவன் யார்?

ஜெபக் குறிப்பு:
எத்தனையோ ஜனங்கள் இயேசுவை அறியாமல், ஒவ்வொருநாளும் மரணமடைகிறார்கள். கொரோனா காலத்தில் இது பல மடங்காக அதிகரித்துள்ளது. ஆகவே, எல்லாரும் இயேசுவை தங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.

ஜூலை 11

வேதப் பகுதி:
நீதிமொழிகள் 17ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
“சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்; இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்.” நீதிமொழிகள் 17:17.

இன்றைய கேள்வி:
யார் தன் வார்த்தைகளை அடக்குகிறான்?

ஜெபக் குறிப்பு:
உங்கள் சொந்தங்களின் இரட்சிப்புக்காக **ஜெபிப்போம்.**

ஜூலை 12

வேதப் பகுதி: நீதிமொழிகள் 18ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.” நீதிமொழிகள் 18:21.

இன்றைய கேள்வி: சிநேகிதம் உள்ளவன் என்ன செய்ய வேண்டும்?

ஜெபக் குறிப்பு: பள்ளிகளில் சிறுப்பிள்ளைகளுக்கு நல்ல கல்வியும், நல்லொழுக்கங்களும் சரியாக கற்றுக் கொடுக்கப்பட **ஜெபிப்போம்.**

ஜுலை 13

வேதப் பகுதி: நீதிமொழிகள் 19ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்." நீதிமொழிகள் 19:17.

இன்றைய கேள்வி: பொய்சாட்சி சொல்லுகிறவன் எதற்கு தப்ப முடியாது?

ஜெபக் குறிப்பு: மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்பில் தவறான காரியங்களை யாரும் கற்றுக் கொடுக்காதபடி, கர்த்தர் மாணவர்களைப் பாதுகாக்க **ஜெபிப்போம்.**

ஜுலை 14

வேதப் பகுதி: நீதிமொழிகள் 20ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; " நீதிமொழிகள் 20:27.

இன்றைய கேள்வி: மதுபானம் குடித்தால் என்னவாகும்?

ஜெபக் குறிப்பு: தமிழ்நாட்டில் மதுபானத்துக்கு தடை உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 15

வேதப் பகுதி: நீதிமொழிகள் 21ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்." நீதிமொழிகள் 21:31

இன்றைய கேள்வி: யார் செலுத்தும் பலி அருவருப்பானது?

ஜெபக் குறிப்பு: கொரோனா வைரஸ் போல, மேலும் பல வைரஸ்கள் வராதபடிக்கு கர்த்தர் நம்மைப் பாதுகாக்க **ஜெபிப்போம்.**

ஜுலை 16

வேதப் பகுதி: நீதிமொழிகள் 22ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "கோபக்காரனுக்குத் தோழனாகாதே; உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே." நீதிமொழிகள் 22:24.

இன்றைய கேள்வி: யார் ராஜாக்களுக்கு முன்பாக நிற்கும்படி உயர்த்தப்படுவார்கள்?

ஜெபக் குறிப்பு: இந்த கடைசிக் காலங்களில் ஜனங்கள் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்பட **ஜெபிப்போம்.**

ஜுலை 17

வேதப் பகுதி: நீதிமொழிகள் 23ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே." நீதிமொழிகள் 23:22.

இன்றைய கேள்வி: எதை வாங்க வேண்டும், எதை விற்க கூடாது?

ஜெபக் குறிப்பு: சிறுபிள்ளைகள் இயேசுவின் பிள்ளைகளாக, இயேசுவைப் போல வாழ பரிசுத்தாவியானவர் உதவி செய்ய **ஜெபிப்போம்.**

ஜுலை 18

வேதப் பகுதி: நீதிமொழிகள் 24ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "என் மகனே, நீ கர்த்தருக்கும் ராஜாவுக்கும் பயந்து நட; கலகக்காரரோடு கலவாதே." நீதிமொழிகள் 24:21.

இன்றைய கேள்வி: யார் மனிதர்களுக்கு அருவருப்பானவன்?

ஜெபக் குறிப்பு: நம்முடைய தாய் தந்தை நன்றாக இருக்கும்படி, அவர்களுக்கு நல்ல வருமானமும், சுகமான வாழ்வும் தொடர்ந்து இருக்க **ஜெபிப்போம்.**

ஜுலை 19

வேதப் பகுதி: நீதிமொழிகள் 25ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: "ராஜாவின் சமூகத்தில் மேன்மை பாராட்டாதே; பெரியோர்களுடைய ஸ்தானத்தில் நில்லாதே." நீதிமொழிகள் 25:6.

இன்றைய கேள்வி: எது வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமமானது?

ஜெபக் குறிப்பு: இன்று நம்முடைய சொந்தக்காரர்களுடைய இரட்சிப்புக்கும், ஆசீர்வாதங்களுக்கும் நல்ல ஆரோக்கியமான வாழ்க்கைக்காகவும் **ஜெபிப்போம்.**

ஜுலை 20

வேதப் பகுதி: நீதிமொழிகள் 26ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “விறகில்லாமல் நெருப்பு அவியும்; கோள்சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்.” நீதிமொழிகள் 26:20.

இன்றைய கேள்வி: இந்த 26ம் அதிகாரத்தில் எந்தெந்த பறவைகள் பற்றி எழுதப்பட்டுள்ளது?

ஜெபக் குறிப்பு: இஸ்ரேல் தேசத்தின் பாதுகாப்புக்காக ஜெபியுங்கள். பல தீவிரவாத குழுக்கள் இஸ்ரேலின் மேல் ராக்கெட் குண்டுகளை ஏவுகின்றனர். தீவிரவாதிகள் அழிக்கப்பட **ஜெபிப்போம்.**

ஜுலை 21

வேதப் பகுதி: நீதிமொழிகள் 27ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்; பேதைகளோ நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்.” நீதிமொழிகள் 27:12.

இன்றைய கேள்வி: சிநேகிதன் அடிக்கும் அடிகள் எப்படிப்பட்டவை?

ஜெபக் குறிப்பு: அமெரிக்கா தேசத்தை கர்த்தர் மேன்மேலும் ஆசீர்வதிக்க, அங்கிருக்கிற எல்லா சபைகளிலும் எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

ஜுலை 22

வேதப் பகுதி: நீதிமொழிகள் 28ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவனாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்.” நீதிமொழிகள் 28:20.

இன்றைய கேள்வி: யார் வாழ்வடையமாட்டார்கள்? யார் இரக்கம் பெறுவார்கள்?

ஜெபக் குறிப்பு: இலங்கை, சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் பெரிய எழுப்புதல் உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 23

வேதப் பகுதி:
நீதிமொழிகள் 29ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
“மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.” நீதிமொழிகள் 29:25.

இன்றைய கேள்வி:
எப்படிப்பட்ட ராஜாவின் சிங்காசனம் என்றென்றும் நிலைத்திருக்கும்?

ஜெபக் குறிப்பு:
வளைகுடா நாடுகளுக்காக ஜெபிக்க வேண்டும். சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு நாடுகள், ஓமன், பக்ரைன், கத்தார் நாடுகளில் எழுப்புதல் உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 24

வேதப் பகுதி:
நீதிமொழிகள் 30: 1-14 வசனங்கள்.

மனப்பாட வசனம்:
“தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்.” நீதிமொழிகள் 30:5.

இன்றைய கேள்வி:
தேவனுடைய வசனமெல்லாம் எப்படிப்பட்டது?

ஜெபக் குறிப்பு:
ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, இங்கிலாந்து, தென் ஆப்ரிக்கா நாடுகளில் எழுப்புதல் உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 25

வேதப் பகுதி: நீதிமொழிகள் 31ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.” நீதிமொழிகள் 31:30.

இன்றைய கேள்வி: யாருக்காக எல்லாம் நாம் வாய் திறந்து பேச வேண்டும்?

ஜெபக் குறிப்பு: இந்தியாவிலுள்ள ஜார்கண்ட், பீஹார், உத்திரபிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் எழுப்புதல் உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 26

வேதப் பகுதி: பிரசங்கி 1ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை.” பிரசங்கி 1:8.

இன்றைய கேள்வி: பிரசங்கி புத்தகத்தை எழுதினவர் பெயர் என்ன?

ஜெபக் குறிப்பு: இந்தியாவிலுள்ள கேரளா, கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மாநிலங்களில் எழுப்புதல் உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 27

வேதப் பகுதி: பிரசங்கி 2ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்;” பிரசங்கி 2:26.

இன்றைய கேள்வி: பிரசங்கி 2ம் அதிகாரத்தில் மொத்தம் எத்தனை முறை சூரியன் பற்றி எழுதப்பட்டுள்ளது?

ஜெபக் குறிப்பு: இந்தியாவிலுள்ள வடகிழக்கு மாநிலங்களான மணிப்பூர், நாகலாந்து, அஸ்ஸாம், மேகலாயா, மிசோராம், திரிபூரா, அருணாச்சலப் பிரதேசத்தில் எழுப்புதல் உண்டாக **ஜெபிப்போம்.**

ஜுலை 28

வேதப் பகுதி: பிரசங்கி 3ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்;” பிரசங்கி 3:11.

இன்றைய கேள்வி: எத்தனை முறை காலமுண்டு என்ற வார்த்தை இந்த அதிகாரத்தில் வருகிறது?

ஜெபக் குறிப்பு: எல்லா நாட்டு அதிபதிகளுக்காகவும், ஆளுகை செய்கின்ற தலைவர்களுக்காகவும் ஜெபிப்போம். தலைவர்கள் ஜனங்களை நல்ல வழிகளில் வழிநடத்த **ஜெபிப்போம்.**

ஜூலை 29

வேதப் பகுதி:
பிரசங்கி 4ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
“ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்;” பிரசங்கி 4:9.

இன்றைய கேள்வி:
? யாரைப் பார்க்கிலும் ஏழையும், ஞானியுமாகிய இளைஞனே வாசி?

ஜெபக் குறிப்பு: இப்போது நிறைய முழுநேர சிறுவர் ஊழியர்கள் நம் தமிழ்நாட்டில் ஊழியம் செய்து வருகிறார்கள். கர்த்தர் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்த **ஜெபிப்போம்.**

ஜூலை 30

வேதப் பகுதி:
பிரசங்கி 5ம் அதிகாரம்

மனப்பாட வசனம்:
“நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்;” பிரசங்கி 5:1.

இன்றைய கேள்வி:
? எங்கு நாம் துணிகரமாய் மனம் பதறி பேசக் கூடாது?

ஜெபக் குறிப்பு:
நம்முடைய மோகன் அங்கிள், ஜாய்ஸ் ஆண்டிக்கு கர்த்தர் நல்ல சுகத்தையும், பெலத்தையும் கொடுத்து, வல்லமையாகப் பயன்படுத்த **ஜெபிப்போம்.**

ஜூலை 31

வேதப் பகுதி: பிரசங்கி 6ம் அதிகாரம்

மனப்பாட வசனம்: “இருக்கிறவன் எவனும் தோன்று முன்னமே பேரிடப்பட்டிருக்கிறான்; ” பிரசங்கி 6:10.

? **இன்றைய கேள்வி:** இந்த அதிகாரத்தில் எத்தனை முறை சூரியன் என்ற வார்த்தை வருகிறது?

ஜெபக் குறிப்பு: இந்த சிறுவர் ஜெபமலர் மாதம் 15,000 அச்சிடப்படுகிறது. இது 6 இந்திய மொழிகளில் வெளிவருகிறது. இதனை வாசித்து, சிறுபிள்ளைகள் ஜெபித்துப் பயனடைய **ஜெபிப்போம்.**

‘இயேசு விடுவிக்கிறார்’

VBS - 2021

கர்த்தருடைய எழுப்புதல் திட்டத்தின்படியே, நமது **‘இயேசு விடுவிக்கிறார்’** சிறுவர் ஊழியத்தின் மூலமாக, கடந்த (2021) மே 18 முதல் 28ம் தேதி வரை (10 நாட்கள்) ‘எழும்பிப் பிரகாசி!’ என்கிற தலைப்பில், Virtual Bible School (VBS) Onlineல் நடைபெற்றது.

ஒவ்வொரு நாளும் காலை 10 மணி முதல், 12 மணி வரை, **‘சத்தியம்’** தொலைக்காட்சி, நமது ‘இயேசு விடுவிக்கிறார்’ Facebook, YouTube, Comforter TV மற்றும் அனேக **உள்ளூர் தொலைக்காட்சி**களில் **நேரலை**யாக (LIVE) ஒளிபரப்பப்பட்டது.

10 நாட்கள் நடைபெற்ற இந்த VBSல், சிறு பிள்ளைகளுக்கேற்றபடி, **‘வெளிச்சம்!’**, **‘பெலன்!’**, **‘வழி!’**, **‘விசுவாசம்!’**, **‘பிரயாசம்!’**, **‘இருள்!’**, **‘மகிமை!’**, **‘தியாகம்!’**, **‘பற்ற வைத்தல்!’**, **‘அபிஷேகம்!’** போன்ற 10 தலைப்புகளில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் மூலமாக, கர்த்தருக்காக **எழும்பிப் பிரகாசிக்க இவைகள் அனைத்தும் மிக அவசியம்** என்பதை இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற அனைத்து சிறு பிள்ளைகளும் அறிந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு நாளும் கருத்துள்ள **பாடல்கள், ஆராதனை நேரங்கள்** மற்றும் **மனப்பாட வசனங்கள்** கற்றுக் கொடுக்கப்பட்டன. மட்டுமல்ல **கைவினை வேலைகள்** (Craft Work) செய்து காட்டப்பட்டது. சிறு பிள்ளைகள் அதனைச் செய்து Facebook மற்றும் Instagramல் ‘#jrvbs2021’ என்ற தளங்களில் பதிவிட்டார்கள். இதன் மூலமாக அனேக சிறு பிள்ளைகளுக்குள் இருக்கிற தாலந்துக்கள் வெளிப்பட்டது.

மேலும், சமுதாயத்தில் காணப்படுகிற காரியங்களை அறிந்து கொள்ளத்தக்கதான **விழிப்புணர்வுப் படங்கள்**, ‘சிறுவர்களுடைய குணாதிசயங்கள் எப்படி எல்லாம் மாற்றப்பட வேண்டும்?’ என்கிறதை உணர்த்தும்படியான **‘பப்பட்’** நாடகங்களும், சிரிக்கவும், சிந்திக்கவும் தக்கதான குட்டிக் கதைகளும், இஸ்ரேல் தேசத்தைக் குறித்து அறிந்து கொள்ளும்படியாக இஸ்ரேல் தேசம் சம்மந்தப்பட்ட Video காண்பிக்கப்பட்டது.

Onlineல் கலந்து கொண்ட சிறு பிள்ளைகளிடம் கேள்விகள் கேட்கப்பட்டபோது, உடனடியாக உற்சாகத்தோடு பதில் அனுப்பினார்கள்.

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், சிறு பிள்ளைகள் தேவனை அறிந்து கொள்ளும்படியாக எளிதான முறையில் தேவ செய்தி கொடுத்து ஜெபித்தார்கள். சிறு பிள்ளைகள் சிலர் ஒவ்வொரு நாளும் நமது சகோதரர் அவர்களிடத்தில் அனேக ஆவிக்குரிய கேள்விகளைக் கேட்டபோது, அதற்கு வேத வசனத்தின் அடிப்படையில் தெளிவான ஆலோசனை கொடுத்து, எழுப்புதலுக்காக ஆயத்தப்பட அவர்களுக்காக விசேஷமாக ஜெபித்தார்கள்.

இந்த VBSல் முன்பதிவு செய்து கொண்ட சிறு பிள்ளைகளுக்கு சான்றிதழ் (E_Certificate) வழங்கப்பட்டது. Online மற்றும் சத்தியம் தொலைக்காட்சி மூலமாக பல லட்சம் சிறுபிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

இந்த VBS மூலமாக மெய்யாகவே தேவ நாமம் மகிமைப்பட்டது.

சிறுவர் ஜெப மலர் புதுப்பித்தல் படிவம்

குறிப்பு:

1. 3 வயது முதல் 14 வயது வரை உள்ள சிறுவர்கள் மட்டுமே பூர்த்தி செய்து அனுப்பவும்.

2. சிறுவர் ஜெபமலர் தற்போது தமிழில் மாத்திரம் அச்சிடப்பட்டு புத்தகமாக அனுப்பப்படுகிறது.

3. இந்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புகிறவர்களுக்கு மட்டுமே சிறுவர் ஜெப மலர் அனுப்பி வைக்கப்படும் மற்றவர்களுக்கு அனுப்பப்பட மாட்டாது.

4. பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை இயேசு விடுவிக்கிறார் சிறுவர் ஊழியம், நாலுமாவடி – 628211, தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரிக்கு துரிதமாக அனுப்பவும்.

5. 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாலிபர் உலகம் பத்திரிக்கைக்கு ரூ. 100/– ஐ செலுத்தி ஒரு வருடத்திற்கு சந்தாதாரராக மாற உற்சாகப்படுத்துகிறோம்.

ஏதேனும் ஒன்றை மட்டும் டிக் (✓) செய்யவும்.

சிறுவர் ஜெபமலர் உங்களுக்கு **புத்தகமாக** வேண்டும் (ஆம் /இல்லை) ☐ ☐

வாட்ஸ்அப்ல் வேண்டும் (ஆம் /இல்லை) ☐ ☐

மின் அஞ்சலில் வேண்டும் (ஆம் /இல்லை) ☐ ☐

விருப்ப மொழி: **தமிழ் / ஆங்கிலம் / ஹிந்தி / தெலுங்கு / கன்னடம் / மலையாளம்**

Preferred Language: **Tamil/ English/ Hindi/ Telugu/ kannadam/ Malayalam**

Name / பெயர் : ....**Std** / வகுப்பு : ....

DOB / பிறந்த தேதி : ....**Age** / வயது : ....

Parent's Name / பெற்றோர் பெயர் : ....

Address / வீட்டு முகவரி : (தெளிவாக எழுதவும்) ....

....

Taluk / தாலுகா : ....**District** / மாவட்டம் : ....

Pincode / பின்கோடு : ....**State** / மாநிலம் : ....

Mobile Number / கைபேசி எண் : ....

WhatsApp Number / வாட்ஸ்அப் எண் : ....

Email ID / மின் அஞ்சல் ....

அல்லது https://kids.jesusredeems.com/siruvar-jebamalar/

இந்த Link ஐ பயன்படுத்தி படிவத்தை நிரப்பவும்.

தொடர்புக்கு: 94883 75315

செய்திகள்

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு நடத்தப்படாது

தமிழ்நாட்டில் மாநில பாடத் திட்டத்தின் கீழ் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவிருந்த மாணவர்களுக்கு, பொதுத் தேர்வு நடத்தப்படாது என அறிவித்திருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

மாணவர்களின் உடல் நலம் மற்றும் மன நலனை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அரசின் செய்தியறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

கொரோனா இரண்டாம் அலை மாநிலத்தின் பல பகுதிகளில் இன்னும் தீவிரமாகவே இருந்து வருவதாலும், 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்த இயலும் என்பதாலும், தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத மாணவர்களை தேர்வு எழுத அழைப்பது தொற்றினை அதிகரிக்கச் செய்யலாம் என்பதை கருத்தில் கொண்டும் பொதுத்தேர்வு ரத்து செய்யப்பட்டிருப்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் தான் மத்திய அரசு சி.பி.எஸ்.இ பாடத் திட்டத்துக்கான 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வை ரத்து செய்தது. அதனைத் தொடர்ந்து தற்போது பல்வேறு மாநில அரசுகளும், தங்கள் மாநில பாடத் திட்டத்தில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வை ரத்து செய்யத் தொடங்கின.

இந்நிலையில், மாணவர்களுக்கு எவ்வாறு மதிப்பெண் வழங்குவது என்பதை ஆராய, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் உயர்கல்வித் துறை செயலாளர், சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும். **(நன்றி: 2021 June 07, BBC News Tamil).**

Registered with Registered News Paper of India No: TNTAM/2003/10126.
Postal Registration No: TTN/04/2021-2023
Date of Publication: 25-06-2021
Date of Posting: 29th & 30th of every month.
Office of Posting: BPC, Tuticorin HO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-82/SR/2021-2023.

இயேசு விடுவிக்கிறார் வழங்கும்

ஜாலி டைம்

இப்போது புதிய வடிவில் புதிய பரிமாணத்துடன்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் 1:30 மணியிலிருந்து 2:00 மணிவரை

நமது சத்தியம் T.V.யில், Comforter T.V.யில் மற்றும் YouTubeல் ஒளிபரப்பப்படுகிறது.

அன்புப் பிள்ளைகளே! பெற்றோரே!

காணத்தவறாதீர்கள்! கண்டு கர்த்தருக்குள் வளருங்கள்!

உங்கள் பிள்ளைகள் இயேசுவைப்போல் வாழ வேண்டுமா?

இணைத்திடுங்கள்!

சிறு பிள்ளைகள் ஜெபத் திட்டம்!

(CHILDREN'S PRAYER PLAN)

Jesus Redeems Ablaze Kids Fellowship

Jolly Time Presents

JR KIDS FELLOWSHIP

An Exciting program for children

EVERY LAST SUNDAY

Afternoon 1:30 p.m. to 2:30 p.m.

SATHIYAM TV, Comforter Digital Channel and in all Social Media Platform

Jesus Redeems MINISTRIES

Nalumavadi - 628211, Thoothukudi Dist., Tamilnadu, India.
Phone: +91 4639-220022 Email: kids@jesusredeems.org

Owned and Published by **J. Selvakumar** from Jesus Redeems, Nalumavadi-628 211
and Printed by Mrs.Joyce Lazarus at Angel Press, 13/81A, Lakshmipuram,
Nalumavadi-628 211. EDITOR **J. SELVAKUMAR**